DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 105/2019 |
| Police Station | Thiruppuvanam P.S |
| Deposition of Witness for | LW. 1/PW.1 |
| Name | விக்னேஸ்வரன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1 absent . Petition filed and allowed. A4, A5 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 18.12.2023 at 11.40a.m

**முதல் விசாரணை:**

நான் திருப்புவனம் வைகை வடகரையில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16.05.2019 ந் தேதி மாலை 5.30 மணியளவில் நான் வைகை ஆற்றின் வடகரையில் உள்ள விளையாட்டு மைதானம் அருகே உள்ள புளியமரத்தில் உட்கார்ந்து அய்யம்போஸ், பிரபு, முத்துபாண்டி, கணபதி, போதும்ராஜா ஆகியோரிடம் பேசிக்கொண்டு இருந்த போது, எதிரி மச்சக்காளை மது அருந்திவிட்டு தகாத வார்த்தையால் என்னை திட்டினார், அதற்கு நான் சத்தம் போட்டு அவரை அனுப்பி வைத்தேன். பின்னர் மச்சக்காளை மகன் ஜான்ரோஸ் எனது அப்பாவையா சத்தம் போட்டாய் என்று கேட்டார். அதற்கு நான் உனது அப்பா மது அருந்திவிட்டு என்னை அசிங்கமாக பேசினார் அதற்கு ஜான்ரோஸ் தனது அப்பா குடிபோதையில் இருப்பதால் அவரை சத்தம் போடுவதாக கூறி சென்றுவிட்டார். அன்று மாலை 6.30 மணிக்கு ஜான்ரோஸ், ராஜாராம், ரகவேல் பைக்கில் வந்து சத்தம் போட்டனர். பின்னர் எதிரிகள் அனைவரும் தகாத வார்த்தையால் அசிங்கமாக பேசினார்கள். பின்னர் ராஜாராம் தனது முதுகில் மறைத்து வைத்திருந்த வாளைக் கொண்டு வெட்டுங்கடா என்று சொன்னார். ஜான்ரோஸ் தனது முதுகு பின்னால் வைத்திருந்த வாளால் அய்யம்போஸின் தலையில் வெட்டினார். அதன்பின்னர் என் வலது கை மணிக்கட்டில் வெட்டினார்,

பின்னர் பிரபுவை ராஜாராம், ரகுவேல் ஆகியோர் சேர்ந்து பிடித்துகொண்டு வாளால் ஜான்ரோஸ் பிரபுவின் கட்டைவிரலை வெட்டினார். வெட்டியவுடன் அங்கிருந்த முத்துபாண்டி, கணபதி ஆகியோர் சத்தம் போட்டவுடன் எதிரிகள் ஓடிவிட்டனர். அங்கிருந்த வழிபோக்கு ஆட்டோவில் ஏறி நான், அய்யம்போஸ், பிரபு திருப்புவனம் மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் மருத்துவமனியில் சிகிச்சையில் இருந்த போது திருப்புவனம் போலீசார் எங்களை விசாரித்தார். நான் எழுதி கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அய்யம்போஸ் மட்டும் மேல்சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனைக்கு சென்றார். நானும் பிரபுவும் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சாட்சிகள் அய்யம்போஸ், பிரபு, கணபதி, முத்துப்பாண்டி, பிரபாகரன், போதுராஜ் அவைரும் எனக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் அய்யம்போஸ் எனக்கு சித்தப்பா உறவு, பிரபு எனக்கு மாமா முறை வேண்டும். மற்ற அனைவரும் எனக்கு நண்பர்கள். இந்த வழக்கில் தனிப்பட்ட நபர்கள் யாரும் சாட்சி பட்டியலில் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த அன்று வடகரையில் தொட்டிச்சி அம்மன் திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருவிழாவிற்கு வந்த மேளம் அடிக்கும் நபர்கள் திருப்புவனம் மைதானத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. அப்பொழுது நான், அய்யம்போஸ், பிரபு ஆகியோர்கள் பைக்கிலிருந்து வந்து கீழே விழுந்துவிட்டீர்கள் என்று சொன்னால் இல்லை. வேறு நபர்கள் விழுந்தார்கள், யார் என்று எனக்கு தெரியாது. நான், அய்யம்போஸ், பிரபு ஆகியோர்கள் இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழுந்து அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்ன தேதி, மாதம் என் கையில் எழுதி வைத்ததை பார்த்து தான் சொன்னேன் என்றால் சரிதான், மறந்து போனதால் எழுதி வைத்திருந்தேன். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 6.30 மணிக்கு நடந்தது. மாலை 6.30 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட எவ்வளவு நேரத்திற்கு பின் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் கால்மணிநேரத்தில மருத்துவமனைக்கு சென்றேன். சுமார் 6.45மணிக்கு மருத்துவமனைக்கு சென்றீர்களா என்றால் சென்றேன். முதல்விசாரணையில் நான் சொன்னதுபோல் நான் மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்திற்குத்தான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்று சொன்னால் மணிக்கட்டிற்கு கீழ் ஏற்பட்ட வெட்டுக் காயத்திற்குத்தான் சிகிச்சை பெற்றேன்.

மருத்துவமனையில் சிகிச்சையின் பொழுது மருத்துவரிடம் இனம் தெரிந்த 7 நபர்கள் தாக்கியதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 7 நபர்கள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த புகாரில் மேற்படி 7 நபர்கள் பெயர்களை குறிப்பிடடுத்தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, 5 நபர்கள் பெயரை குறிப்பிட்டுள்ளேன். இரண்டு நபர்கள் அடையாளம் தெரியாத நபர்கள் என்றும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் 5 நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத 2 நபர்கள் என்று எதுவும் நான் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக புகாரில் குறிப்பிட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது மருத்துவரிடம் அருவாளால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, வாள் என்று தான் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் நான் அருவாளால் தாக்கியதாக தான் சொல்லியுள்ளேன் என்றும் வழக்கிற்காக வாள் என்று தற்பொழுது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி 2 அய்யம்போசிற்கு தலையில் காயம் என்று தான் சொல்லியுள்ளேன் என்றும் அவருக்கு எந்த பகுதியில் காயம் என்று புகாரிலும் போலீசார் விசாரணையிலும் குறிப்பிடடு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த இடத்தில் இரத்தக்கரை படிந்திருந்ததா என்றால் இரத்தக்கரை இருந்தது. சாட்சி அய்யம்போசிற்கு காயம் ஏற்பட்ட உடன் மயக்கமாகிவிட்டதால் அந்த இடத்தில் மற்ற நபர்களுக்கு என்ன நடந்தது என்று அவருக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. (தற்பொழுது சாட்சி பின்னிட்டு தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார்). இந்த சம்பவத்தின் பொழுது 3ம் எதிரி ரகுவேலுக்கு வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல, மருத்துவமனைக்கு வந்த பிறகு தான் ரகுவேலுக்கு காயம்ஏற்பட்டது எனக்கு தெரியும். முதல்விசாரணையில் சொன்னது போல் ரகுவேல், ராஜாராம் ஆகியோர் என்னையும், பிரபுவையும் பிடித்துக்கொண்டு 1ம் எதிரி ஜான்ராஜ் வெட்டியதாகத்தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றீர்களா, அல்லது புறநோயாளியாக சிகிச்சை பெற்றீர்களா என்றால் எனக்கு ஏறபட்ட காயத்திற்கு தையல் போட்டுவிட்டு அன்றையதினமே வீட்டுக்கு சென்றுவிட்டேன். அதன்பின்னீடு தான் இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, மருத்துவமனையில் இருக்கும்பொழுதே போலீசாரிடம் நான் புகார் கொடுத்துவிட்டேன். புகார் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தேனா, ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக என்னை எங்கு வைத்து,

எப்பொழுது எத்தனை மணிக்கு போலீசார் விசாரித்தார்கள் என்றால் என்னை மருத்துவமனையில் வைத்து சார்பு ஆய்வாளர் விசாரித்தார். அதன்பின்னீடு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, போலீசார் என்னை விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். அய்யம்போஸ் தான் சிகிச்சை பெற்றார். மதுரை அரசு மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் முழுமையான சிகிச்சை பெற்றேனா என்றால் முதல் உதவி சிகிச்சை மட்டும் கொடுத்து என்னை அனுப்பி வைத்தார்கள். போலீசார் விசாரணையில், முதல்உதவி சிகிச்சை கொடுத்து என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னமுறையில் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நானும், அய்யம்போஸ், பிரபு மூவரும் இருசக்கர வாகனத்தில் வந்து 5ம் எதிரி மற்றும் 3 ம்எதிரி மீது மோதுவது போல் வந்து கீழே விழுந்தோம் என்றும் 5ம் எதிரி மற்றும் 3 ம் எதிரி கேட்கும்பொழுது நானும், அய்யம்போஸ், பிரபு மூவரும் சேர்ந்து வாளால் 3வது எதிரி ரகுவேலை வெட்டி 5ம் எதிரியை அடித்தும் காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு 3, 5 எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்துவிடுவார்கள் என்ற பயத்தில் நாங்கள் ஓட்டிச்சென்று கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கையில் காயம் ஏற்பட்டதால் புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். புகார் எதுவும் நான் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக யாரோ புகாரை எழுதிக்கொடுத்தார்கள் என்றும் நான் புகார் எழுதிக்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**